- யோப்பா பட்டணத்திலே வாழ்ந்தவள் - (அப்.9:36)
- அந்தப்பட்டணத்திலே நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்தவள் - (அப்.9:36)
- வியாதிப்பட்டு மரணமடைந்தாள் - (அப்.9:37)
- விதவைகளை மிகவும் நேசித்தவள் - (அப்.9:39)
- பேதுருவினால் உயிரோடு எழுப்பப்பட்டாள் - (அப்.9:41)
- யோப்பா பட்டணத்து ஜனங்கள் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாவதற்கு தபீத்தாளின் மரணம் சாட்சியாயிருந்தது - அப்.9:42
- வேதாகமம் இவளை ஒரு சீஷி (கர்த்தருடையவள்) என காண்பிக்கிறது - (அப்.9:36)



தபீத்தாள் **Tabitha**

## தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே,

**அவரைத்தேடுங்கள்;**

**நீதியைத் தேடுங்கள்,**

**மனத்தாழ்மையைத் தேடுங்கள்;**

**அப்பொழுது ஒருவேளை**

**கர்த்தருடைய கோபத்தின்நாளிலே**

**மறைக்கப்படுவீர்கள்**

**செப்பனியா 2:3**




"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



# வேத அறிவுப் போட்டி எண்: 150

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. உம்முடைய பரிசுகளை வேறொருவனுக்குக் கொடும் என்ற தீர்க்கதரிசி யார்?
2. நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன் என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?
3. கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள்; நம்மைப் பீறினார், அவரே நம்மை என்னசெய்வார்?
4. அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் எவரில் நிலைத்திருக்கிறான்?
5. கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது; அது சங்காரம் போல எவரிடத்திலிருந்து வருகிறது?
6. ஒன்றான ஆண்டவராகிய தேவனையும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும் மறுதலிக்கிற பக்தியற்றவர்களாகிய சிலர் எப்படி நுழைந்திருக்கிறார்கள்?
7. நியாயத்தை எட்டியாக மாற்றி, நீதியைத் தரையிலே விழப்பண்ணுகிறவர்களே, அவரை என்ன செய்யுங்கள்?
8. முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் என்னவுமாயிருக்கிறான்?
9. சீயோன் பர்வதத்திலே தப்பியிருப்பார் உண்டு, அவர்கள் எப்படியிருப்பார்கள்?
10. புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டுபோனார்கள் ஆனால் எதை கூடக் கொண்டுபோகவில்லை?

### புதிய ஏற்பாட்டு ஸ்திரீகள் ஒரு பார்வை...

- ♏ மரியாள் - லூக்கா 8:2
- ♏ யோவான்னாள் - லூக்கா 8:3
- ♏ சன்னாள் - லூக்கா 8:3
- ♏ மார்த்தாள் - யோவான் 12:2
- ♏ லீதியாள் - அப்போஸ்தலர் 16:14
- ♏ தபீத்தாள் - அப்போஸ்தலர் 9:36
- ♏ ரோதை - அப்போஸ்தலர் 12:13



நீங்கள் ஒரு புதியஏற்பாட்டு ஸ்திரீயா?
ஆம் என்றால்
அவர்களைப்போல புதிய ஏற்பாட்டு சீஷியாக இருந்து தேவனை தொழுதுகொள்ளுங்கள்.

"பிதாவாகிய தேவனாலும் பிதாவின் குமாரனாயிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும், சத்தியத்தோடும் அன்போடுங்கூட, உங்களோடிருப்பதாக" 3யோவான் 3

